**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW24 (PW9) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 25.11.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. ராஜா | Father Name | : | திரு.காவேரிப்பன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தளியில் குடியிருக்கிறேன் . சத்துணவு அமைப்பாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் அண்ணன் ராம்மூர்த்தி, தங்கை புஷ்பா, தம்பி தாசராஜ் ஆவார்கள். என் தங்கையை என் தாய்மாமன் கோபால் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம் . என் தாய்மாமன் கோபால் முதலில் இராணுவத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று அதன் பிறகு அசோக் லேலாண்டு கம்பெனியில் வேலை செய்து வந்தார் . என் தாய்மாமன் கோபால் 02.05.1997 ல் இறந்துவிட்டார். கோபால் இறந்துவிட்டதாக பேப்பரில் இரண்டு நாட்கள் கழித்து செய்திதாள் பார்த்து தெரிந்துக்கொண்டேன் . பேப்பரில் செய்தி வந்தவுடன் தளி காவல் நிலையம் சென்று என்னுடைய உடைய அப்பா புகார் கொடுத்தார்.

கோபால் இறந்துவிட்டதாக என் தந்தையார் புகார் கொடுத்தார் . கோபாலை இருசக்கர வாகனத்தில் ஏற்றி வந்து பெங்களூர் வந்த இரண்டு நபர்கள் கோபாலை கொலை செய்துவிட்டதாக போலீசார் சொன்னார்கள்.

என்ன காரணத்திற்காக கோபாலை கொலை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் அப்பா போலீசாரிடம் என்ன Inland Letter கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் போலீசாரிடம் எந்த ஆவணத்தையும் ஒப்படைக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையில் கோபாலுக்கும் , அல்லி ராணி என்பவருக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததாகவும் அந்த கள்ளத்தொடர்பை தானப்பா பார்த்துவிட்டு அவர் மனைவியை நன்றாக அடித்துவிட்டார் என்றும் , இது சம்பந்தமாக அல்லி ராணி ஒரு கடிதம் ஒன்றை எனக்கு எழுதினார் என்றும் , பின்பு தானப்பாவும் , அல்லி ராணியும் குடும்ப நடத்தினார்கள் என்றும் , அந்த சமயத்திலும் கோபால் அல்லி ராணியிடம் தொடர்ந்து தொடர்ப்பு வைத்திருந்தார் என்றும், 02.05.1997 தேதி என் மைத்துனர் கோபாலை மோட்டார் சைக்கிளில் உப்பாரப்பள்ளி அருகே , பெரியகோடிப்பள்ளி ரோட்டில் கொலை செய்துவிட்டார் என்றும், தானப்பா தான் நாராயணப்பா என்பவருக்கு பணம் கொடுத்து நாராயணப்பா தன் நண்பர் விஜியுடன் சேர்ந்துக்கொண்டு கொலை செய்த விவரம் தெரியவந்தது என்றும், இது சம்பந்தமாக 26.10.1997 அன்று ஆய்வாளர் என்னனை விசாரித்தபொழுது அல்லிராணி 07.08.1996 தேதியிட்டு என் தகப்பனாருக்கு எழுதிய கடிதத்தையும் 26.10.1996 தேதி எனக்கு எழுதிய கடிதத்தை போலீசார் வசம் ஒப்படைத்தேன் என்றும் அதை

ஆய்வாளர் படிவம் 95 மூலம் கைப்பறார்னர் என்றும், அந்த படிவம் 95 ல் நானும் பாஸ்கரும் கையெழுத்து போட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது கோபால் எப்படி கொலை செய்யப்பட்டார் என்று தெரியாது என்று சாட்சியத்தை மாற்றி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

முதல் விசாரணையில் பெங்களூரை சேர்ந்த இரண்டு நபர்கள் கோபாலை கொலை செய்ததாக சொல்லும் பட்சத்தில் அந்த விவரங்கள் போலீசார் சொல்லியும் , பேப்பரை பார்த்துப் படித்து தான் தெரிந்துக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான் . மற்ற எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை : இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.11.27 12:40:55 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW31 (PW8) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 25.11.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர். திருமதி. வி. சரோஜா | Father Name | : | திரு.சுந்தர்ராஜுலு |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused Present.**

**முதல் விசாரணை:**

நான் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துமனையில் மருத்துவ அலுவலகராக இருந்து 2000 ம் வருடத்தில் விருப்ப பணி ஓய்வு பெற்றேன் . நான் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துமனையில் மருத்துவ அலுவலராக பணியாற்றியபோது Unidentified body பற்றி requisition Letter யை தேன்கனிக்கோட்டை போலீசார் 03.05.1997 ம் தேதி இரவு 7.10 மணிக்கு அந்த உடலை பிரேத பரிசோதனை செய்வதற்கு கொடுத்தார்கள் . அது ஒரு ஆண் பிரேதம் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது என்னிடம் கொடுக்கப்பட்ட பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் ஆகும் . அந்த வேண்டுகோள் கடிதம் **Ex.P.4** ஆகும். அந்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று 04.05.1997 ம் தேதி காலை 8.00 மணிக்கு பார்த்து பிரேத பரிசோதனை அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு தொடங்கினேன் . மேற்படி பிரேதத்தில் பிரேத விரைப்பு தன்மை ஏதும் காணப்படவில்லை , பிரேதம் சாதாரண நிலையில் படுக்க வைக்கப்பட்டு இருந்தது. இரண்டு கை மற்றும்

இரண்டு கால்கள் Straight ஆக இருந்தது. கண்கள் மூடிய நிலையில் காணப்பட்டது. மூக்கு அழுத்திய(Compressed) நிலையில் காணப்பட்டது, அவர் முகத்தில் இரத்த கறைகள் காணப்பட்டது . வாய் திறந்த நிலையில் காணப்பட்டது. வலது பக்க மேல்பக்க பற்கள் உடைந்த நிலையில் காணப்பட்டது. நாக்கானது வாயின் உள்ளே இருந்தது.

அந்த பிரேதத்தின் மீது காணப்பட்ட வெளிபுற காயங்கள் :

1) ஒரு வெட்டு காயம் வலது பக்க Mandal பகுதியில் 2cm X1cm X எலும்பு ஆழத்திற்கு காணப்பட்டது.

2) ஒரு வெட்டு காயம் மேற்படி Mandal ல் நடுபகுதியில் 7X2cmX எலும்பு ஆழத்திற்கு காணப்பட்டது.

3) இரண்டு வெட்டு காயங்கள் Chin பகுதியில் காண்ப்பட்டது. அது Vertical ஆகவும், Parallel ஆகவும் 2X1X எலும்பு ஆழத்திற்கு காணப்பட்டது.

4) ஒரு வெட்டு காயம் வலது பின்பக்க கையில் 2cmX1cmX1/2cm அளவில் காணப்பட்டது.

5) ஒரு வெட்டு காயம் 2cmX1cmx எலும்பு ஆழத்திற்கு வலது Elbow ல் காணப்பட்டது.

6) ஒரு வெட்டு காயம் வலதுபுற புருவத்தின் மீது காணப்பட்டது . அது 5cmX2cmX எலும்பு ஆழத்திற்கு காணப்பட்டது.

7) சிராய்ப்பு காயம் முன்பக்க கழுத்தின் நடுபகுதியில் காணப்பட்டது.

8) ஒரு வெட்டு காயம் வலதுபுற கழுத்து பகுதியில் 2cmX1cmX1/2cm அளவில் காணப்பட்டது.

9) ஒரு வெட்டு காயம் கழுத்தின் பின்பகுதியில் 2cmX1CmX1/2 cm அளவில் காணப்பட்டது.

10) ஒரு வெட்டு காயம் Right elbow posterior பகுதியில் 3X1X எலும்பு ஆழத்தில் காணப்பட்டது.

11) ஒரு வெட்டு காயம் இடதுபுற அக்குள் பகுதியில் 2 cm X1 cm X1/2 cm அளவில் காணப்பட்டது.

12) ஒரு வெட்டு காயம் முழங்கையின் நடுபகுதியில் காணப்பட்டது , அது 5 cm X2cmX எலும்பு ஆழத்தில் காணப்பட்டது.

13) ஒரு வெட்டு காயம் இடதுபுற முழங்கையின் 2 cm X1cmX1/2cm அளவில் காணப்பட்டது.

14) ஒரு வெட்டு காயம் இடது புற மோதிர விரலில் 2 cm X2cmX எலும்பு ஆழத்தில் காண்ப்பட்டது, அந்த பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது.

15) ஒரு வெட்டு காயம் வலது Nipple ல் 2X1cmX Thoracic Cavity வரை சென்றுள்ளது.

16) ஒரு வெட்டு காயம் வலது பக்க ஆக்சிலில் 2 cm X1 cm X தசை ஆழத்திற்கு காணப்பட்டது.

17) 15 மற்றும் 16 காயத்திற்கு நடுவே 2 cm X1 cm X எலும்பு ஆழத்திற்கு ஒரு வெட்டு காயம் காணப்பட்டது.

18) ஒரு வெட்டு காயம் வயிற்றின் மேல் பகுதியில் காணப்பட்டது. 2 cm X1 cm X தசை ஆழத்திற்கு காணப்பட்டது.

19) ஒரு வெட்டு காயம் வலது தொடையில் 2 cm X1 cm x1/2 cm அளவில் காணப்பட்டது.

20) கன்னத்தின் Maxillary Bone உடைந்து காணப்பட்டது. அந்த பக்கத்தில் இருந்த 8 பற்களும் Dismantle ஆகி இருந்தது.

21) ஒரு வெட்டு மற்றும் குத்து காயம் 2 மற்றும் 3 வது காயத்திற்கு நடுவே அந்த காயம் 15 வது காயத்திற்கு Corresponding ஆக உள்ளது.

22) 8 மற்றும் 9 வது காயத்திற்கு இடையே வலதுபுற மார்பிலுள்ள விலா எலும்புகளில் இரத்த உறைவு காணப்பட்டது.

23) இதய அறைகள் காலியாகவும், வெளிரியும் காணப்பட்டது.

24) வலது பக்க நுரையீரல் 400 கிராம் அளவிலும், இடதுபக்க நுரையீரல் 300 கிராம் அளவில் காணப்பட்டது.

25) வலதுபுற நடுபகுதி Lungs கன்றி காணப்பட்டது.

26) நாவடி எலும்பு சீராக இருந்தது

27) வயிற்று பகுதியில் 200 ML திரவம் காணப்பட்டது

28) வயிற்றின் சுவர்கள் நல்ல நிலையில் காணப்பட்டது.

29) கல்லீரல் 1100 கிராம் அளவிலும் , அதனை வெட்டி கூராய்வு செய்தபோது வெளிரி காணப்பட்டது–

30) மண்ணீரல் 100 அளவிலும் அதனை வெட்டி கூராய்வு செய்தபோது வெளிரி காணப்பட்டது.

31) சிறுநீரகம் தலா 100 கிராம் அளவிலும் , அதனை வெட்டி கூராய்வு செய்தபோது வெளிரி காணப்பட்டது–

**தலையின் உட்பகுதியில் காணப்பட்ட காயங்கள்** 1) ஒரு வெட்டு காயம் தலையின் நடுபகுதியில் 10X3X எலும்பு ஆழத்திற்கு காணப்பட்டது .சுச்சர் லைனில் ஒரு எலும்பு முறிவு காணப்பட்டது.

2) கபால எலும்பு அதே இடத்தில் பல்வேறு நிலையில் உடைந்து காணப்பட்டது.

3) மூளையின் பகுதி அந்த காயத்தின் வழியாக பக்கவாட்டு காயத்தின் வழியாக வந்துக்கொண்டு இருந்தது

4) மூளை 600 கிராம் அளவில் சேமி Solid நிலையிலும் காணப்பட்டது. மூளையின் ஒரு பகுதி அந்த எலும்பு முறிவில் இருந்து வெளியே வந்திருந்தது.

<u>கருத்துரை:</u>

இறந்து நபர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தாலும் , அதிர்ச்சி மற்றும் இரத்த போக்கினால் இறந்து இருக்கக்கூடும என்றும் , அவர் இறப்பானது இநத் பிரேத பரிசேதானை செய்வதற்கு 42 –46 மணி நேரத்திற்கு முன்னராக ஏற்பட்டு இருக்கக்கூடும் என்று நான் கருத்துரை வழங்கினேன் . அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **EX.P.5** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னுடைய பிரேத விசாரணை அறிக்கையில் அந்த பிரேதத்தின் பெயர் அவர் தந்தையார் பெயர் , அவர் விலாசம் ஏதும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன காயங்கள் ஒரு கனரக வாகனத்தின் தகடு கிழித்தும் , ஒரு கரடு முரடான ரோட்டில் விழுந்து அநத் கனரக வாகனம் சுமார் 200–300 மீட்டர் இழுத்து செல்லும் போது அவருக்கு அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் அது சரியல்ல. அந்த கனரக வாகத்தில் உள்ள ராடு மற்றும் தகடுகள் கிழிக்கப்பட்டால் மேற்படி நபருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட

வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல அந்த பிரேதத்தின் மீது காணப்பட்ட காயங்கள் Incised wound ஆகும். போலீசார் சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் அவர்களுக்கு ஆதரவாக நான் அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் அது தவறு. இறந்து போன நபருக்கு விபத்தினால் தான் மேற்கண்ட காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2025.11.27 12:41:09 +0530